குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.71/2020

அ.சா.7

2026–ம் ஆண்டு பிப்ரவரி 24–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 07–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன் | தொழில் | |
| தந்தை பெயர் | கண்ணையன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.50 மணி,

Accused Arivazhagan asbent. Petition u/s.317 of Cr.P.C filed and allowed. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் வேலகவுண்டனூர் செங்கல்சூளை பஸ்ஸ்டாப் அருகே குடியிருந்து, ஆட்டோ ஓட்டி வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு இரவு 09.00 – 10.00 மணியளவில் நான் என் வீட்டிற்கு முன்பாக இருந்தபோது, தாரமங்கலம் பக்கம் இருந்து, ஓமலூர் செல்லும் சாலையில் ஓமலூர் நோக்கி ஈச்சர் வாகனம் வந்தது. கணேசன் என்பவர் மேச்சேரி பிரிவு ரோட்டில் கடை வைத்துள்ளார். அவர் கடையை மூடிவிட்டு, ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில், ஓமலூர் – தாரமங்கலம் சாலையில் தாரமங்கலம் நோக்கி சென்றார்.

2. வி.ஐ.பி சிட்டி பிளாட் எதிரே ஈச்சர் வாகனம் கணேசன் சென்ற ஸ்கூட்டி வாகனத்தின் மீது மோதி புளியமரத்தின் மீது கணேசனை ஈச்சர் வாகனம் மோதி விட்டது. கணேசனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அவரை நாங்கள் ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்பு, அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். விபத்து ஏற்படுத்திய ஈச்சர் வாகனம் மற்றும் அதன் ஓட்டுநர், கணேசன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் பதிவெண் ஆகியவை எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தார்கள்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.24 17:41:44 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. சம்பவ இடமான வி.ஐ.பி சிட்டி பிளாட்டிற்கும், எனது வீட்டிற்கும் சுமார் 25 மீட்டர் தூரம் இருக்கும். போலிசார் விசாரணையில் ஈச்சர் வாகனம் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாகவும், அதனால் இருசக்கர வாகனம் புளியமரம் மீது மோதியதாகவும் சொல்லவில்லை என்றால் சரி. விபத்தில் இறந்த கணேசன் என்பவரது வீடு மோட்டூரில் உள்ளது. எனது வீட்டிலிருந்து சுமார் 2 கி.மீ தூரத்தில் உள்ளது. சம்பவத்தின்போது விபத்தில் இறந்த கணேசன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தார்.

4. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் ஈச்சர் வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றது. கணேசன் ரோட்டின் வலதுபுறம் ஏறிச்சென்றார் என்றால், சரியல்ல ஈச்சர் வாகனம் தாறுமாறாக வந்தது. விபத்தில் இறந்த கணேசன் சரிவர வாகனத்தை ஓட்டாமல், ரோட்டின் வலதுபுறமாக ஏறிச்சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், மேற்படி விபரத்தை நான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றாலும், தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு சம்பவம் இரவு 09.30 மணிக்கு நடந்ததால் சம்பவத்தை நேரடியாக பார்க்காமல், தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 03.39 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.02.24 17:41:48 +0530